Oslo

# Osloskolen 2023 இற்கு நல்வரவு





# நீங்கள் எம்மிடம் வருவதை எதிர்பார்த்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம்!



**உங்களது பிள்ளையை இலையுதிர்கால பகுதியின் போது பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்கு Osloskolen இல் உள்ள நாம் அனைவரும் மகிழ்வுடன் எதிர்பார்க்கிறோம்.**

முதலாவது பாடசாலை நாள் குடும்பத்திற்கு ஓர் முக்கிய தினம் ஆகும். இந்த தினத்தை பலர் மகிழ்வுடன் நீண்ட காலமாக எதிர்பார்ப்பார்கள், சிலர் சில சமயம் சற்று பயப்படுவார்கள். எது எவ்வாறு இருந்தாலும் உங்கள் பிள்ளைக்கு ஓர் சிறந்த பாடசாலை ஆரம்பத்தை அமைக்கும் வகையில் எம்மால் இயன்றவை அனைத்தையும் நாம் செய்வோம்.

எல்லா பிள்ளைகளும் பாடசாலையில் பாதுகாப்பையும் தகுந்தை வரவேற்ப்பையும் பெற வேண்டும்.இங்கு பணி புரியும் நாம் மற்றும் பெற்றோர்களாகிய நீங்கள் இணைந்து ஒன்றாக ஒத்துழைத்து பிள்ளைகளுக்கு ஓர் சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு பாடசாலையில் பிரியத்தை ஏற்படுத்த வேண்டும்.

உங்கள் பிள்ளை ஏற்கெனவே எவ்வகையான திறமையை கொண்டு இருந்தாலும் பிள்ளைகளினது தரத்திற்கு ஏற்ப ஆசிரியர்கள் அவர்களை அணுகுவார்கள். நாம் அவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு கல்வி ஆர்வத்தை வழங்கி அத்தோடு அவர்களது நல்லார்வத்தை தூண்டி மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவர்களும் மேலும் முன்னேற்றம் அடைவதற்கு முயற்சிக்க உதவி வழங்குவதே எமது தொழில் ஆகும்.



உங்களுடனும் உங்களது பிள்ளையுடனும் மேலும் அறிமுகமாகிக் கொள்வதற்கு நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

## பாடசாலை ஆரம்ப நல்வாழ்த்துக்கள்!

இங்கனம்
Marte Gerhardsen, Osloskolen இன் இயக்குநர்



# பிள்ளைகள் பல்வேறு வகையில் கற்றுக்கொள்வார்கள்

பிள்ளைகள் ஆர்வமாகவும், தன்னிச்சையாகவும் உலகை ஆராய்ந்து மகிழ்ச்சி அடைவார்கள். அதை நாம் வரவேற்கிறோம்.

மாணவர்களால் என்ன செய்ய முடியும், அவர்களது ஆர்வங்கள் என்ன அத்தோடு அவர்கள் கற்றுக்கொள்வதற்கு சிறந்த வழிமுறை என்ன என்ற விடயங்களில் ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் நன்கு அறிந்து கொள்வார்.

கல்வியை கற்றுக்கொள்வதற்கு வேறுபட்ட பல வழிகள் உண்டு - வகுப்பில் இருந்து வகுப்பு மாணவர்கள் அனைவருடன் ஒன்றாக, வகுப்பிலும் வகுப்பிற்கு புறம்பாகவும் சிறிய குழுக்களாக, ஆசிரியர் உடன் தனிப்பட்ட முறையில் அல்லது அதே வருட மாணவர்கள் அனைவருடன் இணைந்து சுற்றுலா ஊடாகவும் கற்றுக்கொள்ளலாம்.

மாணவர்களின் வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்றவாறு கல்வியூட்டல் அமைக்கப்பட்டு இருந்தாலும் அனைவரும் பொதுசமூகத்தின் ஒரு பகுதியாக இருப்பார்கள்.

# மாணவர்கள் எவற்றை எவ்வாறு கற்றுக்கொள்வார்கள்?


உங்களுக்கு பல கேள்விகள் இருக்கலாம். உங்களது கேள்விகள் சிலவற்றுக்கு பதில்களை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கும், பாடசாலை ஒரு பாதுகாப்பான மற்றும் சிறந்த இடமாக அமைவதற்கும் அனைத்து பிள்ளைகளுடனும் பெற்றோர்களுடனும் கோடைகாலத்திற்கு முன்னர் பாடசாலை தொடர்பு கொள்ளும்.

வீட்டில் இருந்தும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருந்தும் நிறைய அனுபவங்களையும் நிறைய அறிவையும் உங்கள் பிள்ளை கொண்டு உள்ளது. பிள்ளைகளுக்கு ஏற்கெனவே உள்ள அறிவையும் அத்தோடு அவர்களால் எவற்றை சாதிக்க முடியும் என்பதையும் அடிப்படையாக வைத்து பாடசாலை அவற்றை மேலும் விருத்தி செய்யும்.

பாடசாலையின் முதல் ஆண்டுகளில் உங்கள் பிள்ளை வாசிக்க, எழுத அத்தோடு எண்ண கற்றுக்கொள்ளும். மாணவர்கள் ஒத்துழைப்பதற்கும், ஒருவருக்கு ஒருவர் செவிமடுப்பதற்கும், தமது சிந்தனைகள் மற்றும் கருத்துக்களை வெளிக்காட்டுவதற்கும் அத்தோடு வகுப்பில் ஓர் நல்ல நண்பராக இருப்பதற்கும் கற்றுக்கொள்கிறார்கள்.

பாடத்திட்டங்கள் என்பது மாணவர்கள் எந்த திறமையை பெறவேண்டும் என்பதை விபரிக்கும் ஆவணங்கள் ஆகும். இவை நாடு முழுவதற்கும் பொதுவானவை, அத்தோடு கல்வி இலாகா ஆணையகத்தின் வலைத்தளமான www.udir.no இல் இவை உள்ளது

# பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் வீட்டில் நீங்கள் இவற்றை செய்வது நல்லது



- பிள்ளைக்கு நிறைய வாசித்தல்
- ஒரு சொல் எதை குறிக்கின்றது என்பதைப் பற்றி சேர்ந்து உரையாடுதல்
- மொழியின் ஒலிகளைக் கொண்டு நகைச்சுவைகள் அத்தோடு வேடிக்கை செய்தல்
- சேர்ந்து விளையாடுவது, எண்ணுவது அத்தோடு தனது முறை வரும் வரை காத்திருப்பது
- உடை அணியப் பழகுதல்

# பாடசாலை




## படத்தில் நீங்கள் காண்பதைப் பற்றி பேசுங்கள்!

பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?
Brøle படத்தில் மறைந்திருக்கிறார் – அவரை உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?
வகுப்பறையை பார்த்தால் அது எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?
S -ஒலியைத் தேடுங்கள்! எத்தனை சொற்களைக் கண்டுபிடித்தீர்கள்?
ஒத்திசை செய்யும் சொற்களை உங்களால் கண்டுபிடிக்க முடியுமா? படத்தில் பல எழுத்துக்கள் உள்ளன - சிலதை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா?
படத்தில் உள்ள அனைத்து நீல பந்துகளையும் கண்டுபிடிக்க முடியுமா?
ரோஜாநிறப் பூக்களா அல்லது மஞ்சள் பூக்களா அதிக அளவில் உள்ளது?
நீங்கள் என்ன வடிவங்களைக் காண்கிறீர்கள்? (முக்கோணங்கள், சதுரங்கள் மற்றும் வட்டங்கள்)


Sara
ALI

# ஓய்வு நேர பாடசாலை ஏற்பாடு (AKS)

AKS என்பது பாடசாலையில் கல்வி பயிலும் நேரத்திற்கு முன்னரும் அதற்கு பின்னரும் பிள்ளைகளுக்கு பாடசாலையால் வழங்கப்படும் ஓர் ஏற்பாடு. ஆகஸ்ட் 1 அன்று AKS திறக்கப்படுகிறது

முதலாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் பகுதிநேர AKS இடத்தை இலவசமாக பெறுவார்கள். இலவசமாக இருந்தாலும் அதற்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும். விண்ணப்ப இணைய முகப்பில் உங்கள் பிள்ளையை AKS இற்கு பதிவு செய்யலாம். இதை நீங்கள் பாடசாலையின் இணையதளத்தில் காணலாம். உங்கள் பிள்ளை படித்து வரும் பாடசாலையின் AKS இல் என்ன நிகழ்கின்றது என்பது பற்றியும் அங்கு நீங்கள் மேலும் வாசித்து அறியலாம்.

AKS வளர்ச்சி ஏற்படுத்துவதோடு வேடிக்கையானது!





# கடமைகளும் உரிமைகளும்

§

- நோர்வே நாட்டில் வசிக்கும் அனைத்து பிள்ளைகளுக்கும் முதல் பத்து ஆண்டுகள் கல்வி பயிலும் கடமையும் உரிமையும் உண்டு.
- உங்களது பிள்ளை கல்வியை பெறும் பொறுப்பு பாதுகாவலர் ஆகிய உங்களுக்குத் தான் உள்ளது.
- ஓர் பாடசாலை வருடத்தில் 190 நாட்கள் மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தர வேண்டும்.
- பாடசாலை நாட்களும் அத்தோடு விடுமுறை நாட்களும் Oslo இல் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் பொதுவானவை.
- மாணவர் பாடசாலைக்கு சமூகம் அளிக்க வேண்டும், அத்தோடு உதாரணமாக பயண விடுமுறை போன்றவற்றுக்கு ஓய்வு வழங்கப்படுவது இல்லை. நீங்கள் விடுமுறைக்கு விண்ணப்பிக்கலாம், அதை அதிபரே தீர்மானிக்கிறார்.
- சில மாணவர்களுக்கு மேலதிக அளவு உதவி அவசியம். அவ்வாறாயின் விசேட கல்வி ஊட்டலை பெறுவதற்கான உரிமை இவர்களுக்கு இருக்கலாம்.

# சிறுபான்மை மொழி கொண்ட மாணவர்கள்

நோர்வே அல்லது சாமிய மொழி தவிர வேறு தாய் மொழியை உங்கள் பிள்ளை கொண்டிருந்தால் அப்பிள்ளை நோர்வே மொழியில் அல்லது தனது தாய் மொழியில் மேலதிக கல்வி ஊட்டலை பெற்றுக்கொள்ளலாம். மூன்று வகையான மேலதிக கல்வியூட்டல்கள் உள்ளன.

- விசேட நோர்வே மொழிப் பயிற்சி என்பது நோர்வே மொழியில் வலுஊட்டப்பட்ட, பொருந்தமைக்கப்பட்ட கற்பித்தல் ஆகும்.
- இருமொழியில் தொழில்துறைக் கல்வி என்பது நோர்வே மொழி மற்றும் மாணவரின் தாய் மொழியில் வழங்கப்படும் துறைக்கல்வி ஆகும்.
- தாய்மொழி கல்வியூட்டல் என்பது மாணவரின் சொந்த தாய்மொழி கல்வியூட்டல் ஆகும்.

# நீங்கள் சாமிய இன பின்னணியைக் கொண்டு இருந்தால்

நீங்களோ அல்லது உங்கள் பிள்ளையோ சாமிய இன பின்னணியைக் கொண்டு இருந்தால் சாமிய மொழியில் கல்வி பயிலுவதற்கான உரிமை அப்பிள்ளைக்கு உண்டு.

சாமிய மொழியில் கற்பித்தல் Nedre Bekkelaget பாடசாலையில் அல்லது தொலைக்கல்வி ஊடாக இடம் பெறும். பாடசாலைக்கு வந்து செல்லும் சவாரி ஏற்பாடு மாணவருக்கு வழங்கப்படும். Osloskolen இல் குறைந்தபட்சம் பத்து மாணவர்கள் சாமிய மொழியில் கற்றுக்கொள்ள விரும்பும் பட்சத்தில் Osloskolen இவ்வேற்பாட்டை வழங்கும்.

www.oslo.kommune.no/skole-og-utdanning/sprakopplaring/undervisning-i-samisk



# பாடசாலையின் நிர்வாகமும் ஊழியர்களும்

பாடசாலைக்கும் AKS இற்குமான பொறுப்பை அதிபர் கொண்டு இருப்பார். பெரும்பாலாக அதிபர் மற்றும் உதவி அதிபரை விட ஒன்று அல்லது கல்வி ஆய்வாளார்கள், சமூகநல ஆசிரியர்கள் அத்தோடு AKS-மேலாளர் ஆகியோர் இருப்பர்.

ஒவ்வொரு வகுப்பிற்கும் வகுப்பாசிரியர் ஒருவர் உண்டு. ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு குழுவிலும் ஏனைய ஆசிரியர்களும் உதவியாளர்களும் இருப்பார்கள்.

# Osloskolen பற்றி

Osloskolen ஆனது Oslo நகராட்சியின் ஓர் பகுதி ஆகும். இதன் பொருள் Oslo இல் வசிக்கும் அனைவருக்கும் பாடசாலை இலவசம்.

நாம் 17000 இற்கும் மேற்பட்ட ஊழியர்களையும் 91000 இற்கும் மேற்பட்ட மாணவர்களையும் அத்தோடு பயிற்சி பெறுபவர்களையும் கொண்டுள்ளோம்.

www.oslo.kommune.no/skole-og-utdanning






Oslo Kommune
கல்வித்துறை இலாகா
Osloskolen
2022

Design: Janne Dahl
Foto: Heidi M. Skjebstad அத்தோடு Mark Haldane
Illustrasjon: Maria Grande Aakermann
Brøle-illustrasjoner: Barbro Barosen, Miksmaster